ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018.01.30

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2017 நவெம்பர்

**பொதுநோக்கு**

2017 நவெம்பரின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்திற்கு அரச பிணையங்கள் சந்தைக்கான உயர்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் காரணமாக சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட தொடர்ச்சியான உட்பாய்ச்சல் ஆதரவாக அமைந்ததுடன், சுற்றுலாவிலிருந்த வருவாய்கள் சிறிதளவில் மேம்பட்டன. 2016 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த தளத்தின் ஓரளவு காரணமாக ஏற்றுமதிகளில் இரட்டை இலக்க வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற போதும் உயர்ந்த இறக்குமதிகளின் காரணமாக இம்மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. அதேவேளை, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிலைமைகளின் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன. இதன்படி, சென்மதி நிலுவை 2017 நவெம்பர் இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட திரண்ட மிகையைப் பதிவுசெய்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் 2016 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 நவெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு (4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமனானது) அதிகரித்தது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | நவெ 2016 ஐ.அ.டொ. மில் | நவெ 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - நவெ 2016 ஐ.அ.டொ. மில் | சன - நவெ 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 809.7 | 940.9 | 16.2 | 9,450.7 | 10,340.6 | 9.4 |
| இறக்குமதிகள் | 1,732.1 | 1,940.4 | 12.0 | 17,366.7(ஆ) | 18,931.3 | 9.0 |
| வர்த்தக மீதி (தேறிய) | -922.4 | -999.5 | | -7,916.0(ஆ) | -8,590.6 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 287 | 287 (இ) | 0.2 | 3,133 | 3,211 (இ) | 2.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 567 | 562 | -0.9 | 6,557 | 6,080 | -7.3 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | 2 | -11 | | -9 | 267 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் | 227 (ஆ) | 350 | | 4,639 (ஆ) | 5,369 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 8 | 140 | | 1,212 | 1,543 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 1,500 | |
| நீண்ட காலக் கடன்கள | 220 (ஆ) | 210 | | 1,226 (ஆ) | 1,297 | |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | - | - | | 700 | 1,000 | |
| ப.நா.நி – விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் பெறுகைகள் | 163 | - | | 332 | 167 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | | 397 | 766 | |
| திரண்ட நிலுவை | - | - | | -653 | 2,005 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தப்படும்.


(ஈ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2017 நவெம்பரில் வர்த்தக நிலுவையில் காணப்பட்ட பற்றாக்குறை விரிவடைந்த வேளையில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தகப் பற்றாக்குறையும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2017இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் விரிவடைந்தது. இதற்கு எரிபொருள் இறக்குமதிகள்

வரைபடம் 1: மாதாந்த வர்த்த நிலுவை




மீதான அதிகரித்த செலவினத்தின் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவினமே காரணமாகும்.

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**

2017 நவெம்பரில் ஏற்றுமதிகள் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கின்றன. எனினும், இவ்வளர்ச்சிக்கு 2016 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த தளத்தின் தூண்டுதலே ஓரளவிற்குக் காரணமாக அமைந்தது.

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வளர்ச்சிக்கு பெருமளவிற்குப் பங்களித்தன. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் பாரம்பரியமற்ற ஏற்றுமதிச் சந்தைகளான அவுஸ்திரேலியா, ஹொங்கொங் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த கேள்வியின் காரணமாக 2017 நவெம்பரில் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டங்கள் + வசதி மீளக் கிடைத்தமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் விரிவடைந்து 2017 நவெம்பரில் 13.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 11.9 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், உயர்ந்த ஏற்றுமதி அளவுகள் நீர்க்கல எரிபொருள் மற்றும் வானூர்தி எரிபொருள் என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகள் மற்றும் ஏற்றுமதி விலைகள் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. அத்துடன், இறப்பர் டயர்கள், அறுவைச் சிகிச்சைக்கான மற்றும் ஏனைய தேவைக்கான கையுறைகள் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, 2017 நவெம்பரில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேலும் அதிகரித்தமைக்கு தேயிலை ஏற்றுமதிகளின் சராசரி விலைகளிலும் அளவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியே முக்கிய காரணமாகும். சராசரி ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் கறுவா, மிளகு, ஏலக்காய் என்பனவற்றின் உயர்ந்த அளவுகளின் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மேலும், இம்மாத காலப்பகுதியில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்களுக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீதான தடை அகற்றப்பட்டமையின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான அதிகரித்த ஏற்றுமதிகளும் முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட திட்டங்கள் + வசதிகள் மீளக் கிடைத்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2017 நவெம்பரில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி இலங்கையின் வணிக ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**


| வகை | நவெ. 2016 (ஐ.அ.டொ. மில்.) | நவெ. 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன - நவெ 2016 (ஐ.அ.டொ. மில்.) | சன - நவெ 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **623.8** | **713.5** | **14.4** | **7,285.2** | **7,745.3** | **6.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 23.2 | 28.4 | 22.8 | 300.0 | 359.8 | 20.0 |
| விலங்குத்தீன் | 6.1 | 8.0 | 31.4 | 60.6 | 70.2 | 15.9 |
| புடவை மற்றும் ஆடைகள் | 383.1 | 424.3 | 10.8 | 4,490.5 | 4,562.0 | 1.6 |
| இதில் ஆடைகள் | 357.3 | 399.0 | 11.7 | 4,234.7 | 4,294.1 | 1.4 |
| புடவைகள் | 18.6 | 17.7 | (4.8) | 180.9 | 188.0 | 3.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 7.1 | 7.6 | 7.5 | 74.9 | 79.8 | 6.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 61.2 | 67.3 | 10.0 | 705.5 | 760.8 | 7.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 18.1 | 22.5 | 24.3 | 254.3 | 236.5 | (7.0) |
| பொறிகள் மற்றும் எந்திரச் சாதனங்கள் | 27.0 | 28.3 | 4.9 | 292.7 | 340.8 | 16.4 |
| போக்குவரத்துக் கருவிகள் | 6.7 | 6.6 | (1.0) | 123.8 | 157.6 | 27.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 24.5 | 44.2 | 80.6 | 256.1 | 371.9 | 45.2 |
| இரசாயன உற்பத்திகள் | 8.8 | 11.8 | 33.1 | 115.1 | 134.0 | 16.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 9.8 | 11.6 | 18.1 | 104.7 | 126.2 | 20.4 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 11.6 | 6.6 | (42.8) | 30.2 | 44.5 | 47.3 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 13.8 | 12.9 | (6.6) | 154.4 | 144.2 | (6.6) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 4.0 | 6.8 | 68.6 | 60.6 | 66.5 | 9.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 6.6 | 11.8 | 79.7 | 82.7 | 105.7 | 27.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.1 | 2.7 | 30.4 | 31.5 | 30.8 | (2.2) |
| ஏனையவை | 17.4 | 19.7 | 13.6 | 222.3 | 233.8 | 5.2 |
| **2. வேளாண்மை உற்பத்திகள்** | **182.9** | **224.1** | **22.6** | **2,125.2** | **2,547.5** | **19.9** |
| தேயிலை | 101.3 | 127.0 | 25.4 | 1,159.2 | 1,402.9 | 21.0 |
| இறப்பர் | 3.3 | 2.3 | (29.6) | 29.4 | 35.7 | 21.1 |
| தெங்கு | 28.9 | 25.7 | (11.0) | 337.4 | 329.0 | (2.5) |
| வாசனைத்திரவியங்கள் | 22.4 | 33.7 | 50.1 | 285.1 | 373.6 | 31.0 |
| காய்கறிகள் | 2.1 | 1.8 | (13.8) | 24.8 | 26.4 | 6.7 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.4 | 1.9 | (21.1) | 28.6 | 31.5 | 10.1 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 6.6 | 8.9 | 35.0 | 108.4 | 129.3 | 19.2 |
| கடலுணவு | 15.8 | 22.8 | 43.8 | 152.2 | 219.1 | 44.0 |
| **3. கனிப்பொருள் மற்றும் ஏனையவை** | **3.0** | **3.3** | **9.1** | **40.3** | **47.8** | **18.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **809.7** | **940.9** | **16.2** | **9,450.7** | **10,340.6** | **9.4** |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




2017 நவெம்பரில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2011 நவெம்பரிற்குப் பின்னர் மிக உயர்ந்த மாதாந்தப் பெறுமதியினைக் காட்டுகின்ற விதத்தில் அதிகரித்தது. இதற்கு பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட உயர்ந்த விலைகள் மற்றும் அதிகரித்த இறக்குமதிகளின் அளவு என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக மசகெண்ணெய் மற்றும் சுத்தகரிக்கப்பட்ட பெற்றொலிய உற்பத்திகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் பெறுபேறாக எரிபொருள் இறக்குமதிகளுக்காக உறப்பட்ட உயர்ந்த செலவினமே காரணமாகும். கோதுமை மற்றும் சோளம் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு தளத்தாக்கமே முக்கிய காரணமாகும். மேலும், தங்க இறக்குமதிகளின் உயர்ந்த அளவு காரணமாக இம்மாத காலப்பகுதியில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உள்நாட்டுச் சந்தையில் அரிசிப் பற்றாக்குறையினை நிறைவு செய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு 2017 நவெம்பரில் அரிசி இறக்குமதிகளின் அளவு மேலும் அதிகரித்தது. பால்மாவின் அதிகரித்த இறக்குமதி அளவு, சராசரி விலை என்பனவற்றின் காரணமாக பாற்பண்ணை உற்பத்திகளின் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. கனிப்பொருள் உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சிமெந்து சூளைக்கற்கள், கட்டடப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சிமெந்து என்பன இறக்குமதிச் செலவினத்துடன் தொடர்பான கட்டுமானத் கைத்தொழிலின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. எனினும், இரும்பு மற்றும் உருக்கின் குறைந்த இறக்குமதிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கட்டுமானக் கைத்தொழிலுடன் தொடர்பான அடிப்படை உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. 2017 நவெம்பரில் வளமாக்கி இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு யூரியாவின் குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். 2017 நவெம்பரில் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக சீனி இறக்குமதி வீழ்ச்சியடைந்தமைக்கு சராசரி இறக்குமதி விலைகளிலும் அளவுகளிலும் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். மேலும், முதலீட்டுப்பொருட்களின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு, போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்து சரக்கு வண்டிகள், முச்சில்லு வண்டிகள், வர்த்தக ரீதியான வாடகை ஊர்திகள் மற்றும் வேளாண்மை உழுபொறிகள் என்பனவற்றின் தாழ்ந்த இறக்குமதிகளைப் பிரதிபலித்ததுடன் அடிச்சட்டங்கள், புகைவண்டிப் பாதைக் கட்டுமானப் பொருட்கள் போன்ற மற்றைய போக்குவரத்துக் கருவிகளின் தளத்தாக்கத்தினையும் 2016 நவெம்பரில் இவ்விடயங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த இறக்குமதிகளையும் பிரதிபலித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி 2017 நவெம்பரின் மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 3: இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | நவெ. 2016 (ஐ.அ.டொ. மில்.) | நவெ. 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன-நவெ 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்.) | சன-நவெ 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **387.9** | **407.7** | **5.1** | **3,964.8** | **4,069.0** | **2.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 141.1 | 174.9 | 23.9 | 1,484.9 | 1,659.5 | 11.8 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.7 | 26.2 | 1,408.6 | 19.6 | 272.1 | 1,289.9 |
| இதில் அரிசி | 1.0 | 25.3 | 2,503.5 | 11.2 | 260.2 | 2,228.3 |
| பால் உற்பத்திகள் | 23.2 | 40.6 | 75.3 | 219.7 | 291.0 | 32.4 |
| மரக்கறிகள் | 30.5 | 39.4 | 29.1 | 333.1 | 327.4 | (1.7) |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 30.2 | 20.0 | (33.7) | 322.2 | 233.8 | (27.4) |
| கடலுணவு | 19.2 | 15.5 | (19.4) | 218.2 | 199.2 | (8.7) |
| வாசனைத் திரவியம் | 9.9 | 6.4 | (34.6) | 124.0 | 84.4 | (31.9) |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 3.3 | 4.5 | 38.3 | 33.8 | 42.0 | 24.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 23.1 | 22.1 | (4.1) | 214.4 | 209.7 | (2.2) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 246.8 | 232.8 | (5.7) | 2,479.9 | 2,409.4 | (2.8) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 49.7 | 51.1 | 3.0 | 486.7 | 474.4 | (2.5) |
| ஊர்திகள் | 64.0 | 62.2 | (2.8) | 736.4 | 677.4 | (8.0) |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 32.4 | 31.3 | (3.5) | 227.1 | 254.0 | 11.9 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 29.6 | 25.7 | (13.0) | 339.7 | 344.9 | 1.5 |
| பிளாத்திக்கு உற்பத்தி | 8.7 | 8.2 | (6.8) | 102.7 | 85.1 | (17.1) |
| குளியலறை மற்றும் மலசலகூடப் பொருட்கள் | 6.4 | 5.2 | (17.8) | 79.8 | 70.7 | (11.4) |
| அச்சிடப்பட்ட பொருட்கள மற்றும் எழுதுகருவிகள் | 3.9 | 4.0 | 1.0 | 37.5 | 37.0 | (1.2) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 52.1 | 45.1 | (13.4) | 470.1 | 465.9 | (0.9) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **882.9** | **1,072.5** | **21.5** | **8,866.5** | **10,242.0** | **15.5** |
| எரிபொருள் | 221.9 | 306.4 | 38.1 | 2,152.8 | 2,994.6 | 39.1 |
| இதில் மசகெண்ணெய் | 34.9 | 95.7 | 173.9 | 514.3 | 608.3 | 18.3 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 142.1 | 185.2 | 30.4 | 1,469.3 | 2,167.4 | 47.5 |
| நிலக்கரி | 44.9 | 25.5 | (43.2) | 169.2 | 218.9 | 29.4 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 28.2 | 82.7 | 193.0 | 440.6 | 677.0 | 53.6 |
| இதில் தங்கம் | 17.9 | 72.7 | 306.5 | 318.7 | 570.7 | 79.0 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 258.3 | 251.1 | (2.8) | 2,477.0 | 2,491.7 | 0.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 1.8 | 58.2 | 3,051.8 | 223.5 | 353.9 | 58.3 |
| கனிம உற்பத்திகள் | 16.8 | 35.5 | 110.8 | 201.0 | 201.5 | 0.3 |
| உணவு உற்பத்தி | 15.5 | 31.3 | 102.4 | 206.4 | 277.1 | 34.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 18.9 | 23.5 | 24.1 | 260.5 | 264.1 | 1.4 |
| தயாரிக்கப்படாத புகையிலலை | 5.5 | 8.9 | 62.0 | 62.7 | 61.3 | (2.2) |
| உரம் | 17.8 | 4.9 | (72.6) | 129.6 | 86.7 | (33.1) |
| வளமாக்கி | 69.4 | 40.9 | (41.0) | 396.2 | 503.5 | 27.1 |
| ஏனையவை | 228.6 | 229.0 | 0.2 | 2,316.1 | 2,330.6 | 0.6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **460.5** | **459.7** | **(0.2)** | **4,523.6** | **4,475.9** | **(1.1)** |
| பொறி மற்றும் சாதனங்கள் | 243.9 | 243.6 | (0.1) | 2,489.6 | 2,391.0 | (4.0) |
| கட்டடப் பொருட்கள் | 149.5 | 157.6 | 5.5 | 1,420.6 | 1,460.5 | 2.8 |
| போக்குவரத்து பொருட்கள் | 66.2 | 57.9 | (12.5) | 607.5 | 617.0 | 1.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.9 | 0.5 | (37.8) | 5.9 | 7.4 | 25.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.8** | **0.5** | **(39.7)** | **11.9** | **144.4** | **1,110.3** |
| **மொத்த இறக்குமதி** | **1,732.1** | **1,940.4** | **12.0** | **17,366.7** | **18,931.3** | **9.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


(அ) தற்காலிகமானவை

(ஆ) திருத்தப்பட்டவை

### நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்


2017 நவெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016 நவெம்பருடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் அதிகரித்த வேளையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் சிறிதளவான அதிகரிப்பைப் பதிவுசெய்தன. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் முதல் ஐந்து மூலங்களான இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பன 2017 நவெம்பர் இறுதி வரையான மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 52.0 சதவீதத்திற்கு வகைகூறின. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2017இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, 2017 நவெம்பரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பொதுவாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017 நவெம்பர் இறுதி வரையான இவ்வாண்டுப் பகுதியில் 7.3 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி


**நிதியியல் பாய்ச்சல்கள்**

நடைமுறைக் கணக்கில் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவானதாக இருந்த போதும் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு 2017 நவெம்பர் மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் வலுவாகக் காணப்பட்டது. 2017 மார்ச்சிலிருந்து பதிவுசெய்யப்பட்ட சாதகமான போக்கின் தொடர்ச்சியாக அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து ஒன்பதாவது மாதமாக தேறிய உட்பாய்ச்சலைக் காட்டின. மேலும், அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் அதிகரித்தன. அதேவேளை, கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் நவெம்பர் மாத காலப்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தமைக்கு இலங்கையில் தொழிற்படுகின்ற வெளிநாட்டுப் பங்குக் கம்பனியொன்றினை உள்நாட்டுக் கம்பனியொன்று கையேற்பது தொடர்பில் ஏற்பட்ட ஒரே தடவையிலான கொடுக்கல்வாங்கல்களே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2017இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியில் பதிவுசெய்யப்பட்டவாறான ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 நவெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு அதிகரித்தன. இது 4.2 மாத இறக்குமதிக்கு நிதியிடப் போதுமானது. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2016 இறுதியின் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.4 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 9.7 பில்லியனுக்கு (5.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானது) அதிகரித்தது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்ககுகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 சனவரி 29 வரை ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2017 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீதம் கொண்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தன.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கு ரூபாவின் செலாவணி அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 சனவரி 29 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|
| ஐ.அ.டொலர் | -0.6% |
| யூரோ | -4.2% |
| பவுண் ஸ்ரேலிங் | -5.3% |
| யப்பானி யென் | -3.9% |
| கனேடியன் டொலர் | -2.3% |
| அவுஸ்திரேலிய டொலர் | -4.2% |
| இந்தியன் ரூபா | -1.3% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி